செ.வெ.எண். 34/மார்ச்　　　　　　　　　　　　　　　　　　　　தேதி : 15.03.2017

**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தருமபுரி பிரிவு சார்பாக சிறந்த வீரர்/வீராங்கனைகள் கண்டறிதல் திட்டத்தின் கீழ் வாலிபால் தேர்வு போட்டிகள் நடைபெற உள்ளது ___ மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்!**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தருமபுரி பிரிவு சார்பாக சிறந்த வீரர்/வீராங்கனைகளை கண்டறிதல் திட்டத்தின் கீழ் (Talent Hunting Scheme) வாலிபால் தேர்வு போட்டிகள் மாவட்ட விளையாட்டரங்கம், தருமபுரியில் 21.03.2017 அன்று நடைபெறவுள்ளது

இத்திட்டத்தில் 14 வயதிற்குட்பட்ட 10 மாணவர்கள் மற்றும் 10 மாணவிகள் தேர்வு செய்யப்பட்டு மாதத்திற்கு 25 நாட்கள் காலை வேளைகளில் பயிற்சி சத்தான உணவு வகைகள், சீருடை மற்றும் விளையாட்டு உபகரணங்கள் ஆகியவை வழங்கப்படும்.

21.03.2017 அன்று நடைபெறவுள்ள வாலிபால் தேர்வு போட்டிகளில் 01.01.2004 அன்றோ அல்லது அதற்கு பின்னரோ பிறந்த விளையாட்டு வீரர்/வீராங்கனைகள் மட்டுமே கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர். தேர்வு போட்டிகளில் கலந்து கொள்பவர்கள் பள்ளித்தலைமையாசிரியரிடமிருந்து புகைப்படம் ஒட்டிய ஆளறிச்சான்று மற்றும் வயதுச் சான்றிதழ் ஆகியவை உடன் எடுத்து வருதல் வேண்டும்.

எனவே 21.03.2017 அன்று நடைபெறவுள்ள வாலிபால் தேர்வு போட்டிகளில் 14 வயதிற்குட்பட்ட மாணவ/மாணவிகள் பெருமளவில் கலந்து கொண்டு பயன்பெற வேண்டுமென மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.